ந.சத்தியபாலன்



# இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்...

10/04/2009.

A. KUMARATH[illegible]AN
KALAIMAG L ROAD
[illegible]
JAFFNA

# இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்...

ந. சத்தியபாலன்

| | |
|---|---|
| தலைப்பு | : இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும் |
| ஆசிரியர் | : ந. சத்தியபாலன் |
| பதிப்புரிமை | : பதிப்பாசிரியருக்கு |
| பக்கங்கள் | : 65 பக்கங்கள் |
| பதிப்பாண்டு | : ஜனவரி 2009 |
| அச்சாக்கம் | : நோபிள் பிறிண்ரேர்ஸ் 545 பருத்தித்துறை வீதி நல்லூர் |
| அட்டைப்படம் | : நிக்சி நெக்ஒண்டி (வேட்டைக்காரன்) கொங்கோ ஜனநாயக் குடியரசு |
| அட்டைவடிவமைப்பு | : பா. அகிலன் |
| வெளியீடு | : அம்பலம் குழுமம் |
| விலை | : 175 ரூபாய் |

காணிக்கை

அப்புச்சிக்கும்
அம்மாவுக்கும்

## ஒரு தலைப்பிரசவம் பற்றி......!

எமது இலக்கியச் சூழலில் சிறு சஞ்சிகையொன்றின் தொடர்ச்சியான வருகையும், அதனூடான பதிப்பு முயற்சிகளும் உயிர்ப்பினைத் தொலைத்து விட்டனவாகவே கருதப்பட்டு வருகின்றன.

எனினும் அந்நிலையை ஓரளவுக்கேனும் மாற்றுவதற்கு 'அம்பலம்' குழுமம் முயன்று வருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடாகவே சமகால ஈழத்துத் தமிழ் படைப்பிலக்கியவாதிகளின் ஆக்க இலக்கியங்களை நூலுருவில் தொடர்ச்சியாக கொண்டு வருவதெனத் தீர்மானித்துள்ளோம். அதன் முதல் நெம்புதலாக எமது நண்பரும் தன் மென்னுணர்வான கவிதை மொழியால் கவிதையுலகில் புறக்கணிக்கப்பட முடியாதவருமாக நிற்கின்ற ந. சத்தியபாலனின் இப்படியாயிற்று நூற்றோராவது தடவையும் என்ற நூலைத் தலைப் பிரசவமாக்கியுள்ளோம்.

இனிவரும் காலங்களில் ஏனைய பல எழுத்தாளர்களின் தொகுப்புகளையும் நூலுருவாக்கி நமது புத்தகப் பாரம்பரியத்தில் ஒரு சிறு அதிர்வையேனும் உண்டு பண்ண அம்பலம் முயற்சித்துக் கொண்டே இருக்கும்.

'ஊர் கூடித் தேரிழுப்போம்.'

த. பிரபாகரன்
கு. லக்மணன்.

## நானும் என் கவிதைகளும்

எண்பதுகளிற் தொடங்கி இன்றுவரை எழுதப்பட்ட எனது கவிதைகள் இவை.

வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் எனக்குள்ள நேசமும் வாழ்தலில் எனக்குள்ள பேரார்வமும் என்னை எழுத வைக்கின்றன.

மேலான இனிய மனுஷகுணங்கள் என்னை எப்போதும் வசீகரிக்கின்றன. நெகிழ்த்துகின்றன. தொடர்ந்து பல தோல்விகளையே பரிசளித்து இன்மைகளின் நிர்த்தாட்சண்ய வெகுமதிகளில் என்னைத்துவண்டு போகவைத்தாலும் அவற்றுக்கும் அப்பால் எனக்கான தரிசனங்களையும் உவந்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை மீதும் எழுத்தின் மீதும் எனக்கிருக்கும் நேசமும் பிடிப்பும் கரைந்து போய்விடமாட்டா என்றே நான் நம்புகிறேன்.

நான் கண்டுகொண்டிருக்கின்றவற்றை

உங்களுக்கும் காண்பிக்கும் எத்தனங்களே என் கவிதைகள். அவற்றின் தொனி உங்களுக்குக் கேட்குமெனில் அதுவே என் மகிழ்ச்சி.

யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் எழுதும் ஆர்வத்தை என்னுள் விதைத்துப் பயிராக்கிய அன்புக்கும் மதிப்புக்குமுரிய எனது தமிழாசிரியர் திருமதி பா. சண்முகராஜா அவர்களுக்கும், நீண்ட காலமாக என் எழுத்துக்களைத் தொகுத்து வெளியிட என்னைத் தூண்டி வழிநடத்தி என் கவிதைகளை முறையுறச் சரிபார்த்துதவிய என்பெருமதிப்புக்குரிய திரு. அ. யேசுராசா அவர்களுக்கும், ஒரு தந்தையின் உரிமையுடனும் அக்கறையுடனும் எனது படைப்புக்களைப் பாராட்டி ஊக்குவித்து என்றும் எனக்குத் துணை நிற்கும் ஓவியர் திரு. ஆசை. ராசையா அவர்களுக்கும் இந்நூலின் வடிவமைப்பிலும் அட்டைப்பட ஆக்கத்திலும் அன்புடன் எனக்குதவி தனது கருத்துரையினையும் வழங்கிய பா. அகிலன் அவர்களுக்கும் மற்றும் என் நண்பர்கள் திரு. சித்தாந்தன், திரு. ரமேஷ், கோகுலராகவன், மருதம் கேதீஸ், தானா விஷ்ணு அருந்தாகரன், தேஜோ, ஹேமசொருபி, .பிரதீபா, சுரேகலா ஆகியோருக்கும் என் எழுத்துக்களைப் பிரசுரித்து உதவிய சஞ்சீவி, உதயன், நமது ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளுக்கும் அம்பலம், கவிதை, நடுகை, தவிர, கலைமுகம், தெரிதல், மூன்றாவது மனிதன், வெளிச்சம், ஆகவே ஆகிய சஞ்சிகைகளுக்கும் அன்புடன் இந்நூலை வெளியிடுதற்கு முன் வந்திருக்கும் அம்பலம் குழுவினருக்கும் இதனை அழகுற அச்சிட்டு உதவிய நோபிள் பிறிண்ரேர்ஸ் உரிமையாளர் நண்பர் ஸ்ரீதர் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

இன்னும் நம்பிக்கைகளோடு

ந. சத்தியபாலன்.

அவரவருக்கு அவரவர் பாத்திரங்கள்: அவரவர் கிண்ணங்கள். சத்தியபாலன் 'மனவோட்டின் மென்பாகம் வெடித்து' வடியுமொரு திரவத்தைத் தன் கிண்ணத்தில் ஏந்துகிறார். கசப்பும், சோகமும் அதன் பிரதான உள்ளீடுகள். வாழ்வு பற்றிய வியப்பும், நேசமும் அவற்றில் கலந்துள்ளனவாயினும் அதன் தொனிப்பொருள் என்னவோ அடிப்படையில் துக்கம் தான்.........யதார்த்தங்களால் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் சத்தியபாலன் 'வாழ்வதற்கான எத்தனங்களே வாழ்வாகிப்போய்விடுகின்ற' நியதியின் முன் துக்கித்த பார்வையாளனாகவும் - விலகிச் செல்ல முடியாத பங்காளியாகவும் நின்று கொண்டிருக்கிறார்.

பின்னுரையிலிருந்து...

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. அழைப்பு | 01 |
| 02. ஏன் | 03 |
| 03. நான் | 04 |
| 04. சிறகடிப்பு | 05 |
| 05. பாறையுடன் பேசுதல் | 07 |
| 06. காவல் | 08 |
| 07. கூத்து | 09 |
| 08. இன்னுமொரு நாள் | 11 |
| 09. இருள் கவ்வ இரத்தமாய் கிடந்த ஒருகாலைப்பொழுது பற்றி | 12 |
| 10. இருளில் அசைகின்ற உருக்கள் | 13 |
| 11. நிலை | 14 |
| 12. விடுதலையாகி | 15 |
| 13. நெடியோடு வீசும் காற்று | 17 |
| 14. அர்த்தம் | 18 |
| 15. தழும்புகள் | 19 |
| 16. பிறப்பு | 20 |
| 17. தோளணைத்த கைகளுக்கு | 22 |
| 18. ஒரு புழுக்கூட்டின் கதை | 24 |
| 19. காணல் | 25 |
| 20. முடிவிலியான ஒரு துயரிசை குறித்து | 27 |
| 21. கண்ணே உறங்குறங்கு | 28 |
| 22. மூன்று பொம்மைகள் | 30 |
| 23. கலையும் பொழுது | 32 |
| 24. தரிசனம் | 33 |

25. ஒரு பின்மாலைப் பொழுதில் 34
26. தன்னுலகு 35
27. மழை 36
28. நடுப்பகலும் நண்டுக்கோதும்
அண்டங்காகமும் ஒரு உறைந்த மனிதனும் 37
29. பிழைக்கத் தெரிந்தவன் நீ 39
30. வேரடி மண்ணில் 40
31. வெளிகளும் மூலைகளும் 41
32. காடு 43
33. தரிசனம் 45
34. கறைபடும் ரகஸ்யங்கள் 46
35. கூடிழிந்த ஒரு பறவைக்குஞ்சின் கதை 47
36. இருப்பு 48
37. காற்றோடு கலப்போம் 49
38. இரண்டு பேர் 50
39. தீய்தல் 52
40. வலி 53
41. நிறைவு 54
42. கனவு 56
43. பின்னுரை 57

## அழைப்பு

நிஜவாழ்வின் நெரிசலில்
முகம் நைந்து தொலையும்
சொல் - நடை செயல் என
ஒவ்வொன்றும்
தன் இயல்பிழக்கும்
நெருங்கிய உறவும்
ஒரு பொறியின் தெறிப்பில்
"இவன் யார்" என விலகும்
நீ இனித் தனி
என வாழ்க்கை சொல்லும்

முதுகிடலா?
முகம் தரலா?
என ஒரு சமர்

புவிதரும் அனுபவமும் தானுமாய்
உரம் பெறத்தானே இப்பாடுகள்

தற்காத்து நீயே
தனி என நிமிர்
உன் பலம் உணர்
அகண்ட இப் பிரபஞ்சத்தில்
உனதிருப்புக்கும் ஒரு அர்த்தம்
உனதும் ஒரு பங்கு
மனிதம் சுமந்து நட
வா ... வாழ்வினைப் பாடு

1994

## ஏன்

ஈரமும் மண்ணும் கண்டாலே
வெட்டுத்துண்டமாய்க் கிடக்கும்
பூஞ்செடியின் சிறுகம்பு
வேர் விட நாள் பார்க்கிறது
வெறும் தரையாய் வரண்டு கிடந்த நிலம்
ஒரு நாள் தூறலுடனேயே
பசும் புற் துளிர்களோடு
புன்னகைக்கிறது
ஒளிர்தலுக்கான வாய்ப்பினைக் காத்திருந்து
கனிந்த காலத்தே
வாழ்வினைத் துய்க்கிறது இயற்கை
அறிவு சுமந்த எமது
மனித இதயங்கள் மட்டும்
ஏன் இப்படி?

1989

## நான்

நான் நானாய்
இருப்பதற்கான
களமாய்
என் இடம்
இருப்பதே
எனக்கும் உனக்கும்
சேமம்
நண்பனே.

நான் யாவர்க்கும்
நண்பனல்லேன்
யாருக்கும்
விரோதியுமல்லேன்

ஸ்னேகிப்பதற்கான
அடிப்படைகளை
இழந்து வரும் இவ்வுலகில்
ஒட்டாது ஒட்டி
அறும் அறுக்கும்
ஒருவனாய் ஆவதிலும்
ஒட்டாத் தனியாய்
நான் நானாய்
இருந்துவிட்டுப் போகிறேன் போ.

1998

## சிறகடிப்பு

வாழ்தலுக்கான எத்தனங்களே
"வாழ்க்கை" என நம்பி
வருஷங்களை விழுங்கியாயிற்று
மனதில் விரிந்த உருவை
ஒரு சிற்பமாய்ச் செதுக்கிக் கொள்ள
முனைந்து முனைந்து
உடைந்த துண்டங்களே
கண்முன்
முழுமை செய்யும் முனைப்புடன்

மீண்டும் தொடங்குகையில்
எல்லாவற்றையும்
காலால் எற்றிப் போகும்
ஒரு விபத்து
சிதைவோடு சிதைவாய்
நொறுங்கிக் கிடப்பவனை
அனுதாபப் பார்வையால்
எரிக்கும் உலகம்
தொலைந்த ஆர்வத்தை
மீண்டும் தேடும்
தாகம் தருவதென
நிழற்றும் மேகங்களின்
நிரந்தரத்துவத்துக்கு ஏங்கும் மனசு
ஈயப் பாறைகள்
காலிற்
பிணைத்து
மெல்ல நகரும்
காலம்

2000

## பாறையுடன் பேசுதல்

சகமனிதனின் சிரிப்பைத் தின்று
திருப்திப்படுகிறாய்
அடுத்தவனின் சந்தோஷத்தைச் சுரண்டி
சுண்ணாம்பாய் வெற்றிலையில் தடவி
நாக்கிழுத்துச் சிவப்பு பார்க்கிறாய்
வகையற்றவனின் ஒரே போர்வை
உன் காலடியிற் கிடக்கிறது ஒரு சாக்காக
எந்த ஒரு எதிராளியின்
வலி முனகலும்
விழாது உன் காதில்
நாற்புறமும் நிலைக் கண்ணாடி பதித்த
உன் பாதாளலோகச் சுவர் நடுவே
குறட்டை விட்டுறங்கு நீ
சுகமாக!

2005

## காவல்

வேலி மதில் - சுவர் - கதவு
எல்லாமும் காவலென்ற கருத்தைத்
தேய்த்தழித்து
மனசுள் பயம் வார்க்கிறது காலம்
தேவையின் உந்துதல்
வெளியே தள்ளும் என்னை
பாதையோரம் நிற்கும்
இயந்திரங்கள்
விரைந்து வந்தவோர்
உந்துருளி தடுக்கப்படுகிறது
எனது நடையில் வேகம்
வந்த காரியத்தை
துரிதமாய் முடித்து
பாதை மாற்றி வீடு வந்து சேர்கிறேன்
வீட்டையொரு காவலென நம்பி!

2007

**கூத்து**

மேலும் ஒரு விளக்கு
சுடரவிந்து மெல்லிய சாம்பர் வெண்கோடாய்ப்
புகை நெளிந்தது...
சௌகர்யமாய் அமர்ந்து கொண்டது
இருள்
பணி முடிந்த திருப்தியுடன்
வெளியேறிற்று பேய்க்காற்று
பயணங்கள் திசையிழந்தன
சக்கரங்கள் மெல்லென ஓய்ந்தன
பாடல்கள் இடைநிறுத்தப்பட்டன
மேலும் மேலும் வேறு இடங்களில்

விளக்குகள் அணைந்தன
கோரப்பற்கள் துருத்திய வாயொடு
குதித்தாடத் தொடங்கியது இருள்
சாமப்பொழுதில்
தொலைவுகளில் ஓங்கியொலித்துப் பின்
ஓய்ந்தடங்கிப் போயின ஓலங்கள்
நோயொடு புலர்ந்த காலையில்
தெருக்களும் நிலங்களும்
கழுவப்பட்டிருந்தன
சுவர்கள் புதுவர்ணம் தீட்டப்பட்டிருந்தன
குளித்துப் புத்தாடை அணிந்து
போய்க்கொண்டிருந்தோரின்
கவனத்துக்குத் தப்பிய கால்விரல்
இறைகளுக்குள்
உலர்ந்து போயிருந்தது
இரத்தம்

2007

## இன்னுமொரு நாள்

கண்களை இருள்கவ்விய ஒரு சில
கணங்களுக்குள்
அது நிகழ்ந்தது
குளறலாய் எழுந்த ஓலம் வெளியிற்
கலந்து கரைந்தது
வீதியிற் சிந்திய குருதி பரவி
உறைந்தது...
எல்லாம் முடிந்ததெனக் கிளர்ந்த
எக்களிப்பின் முகத்தில்
புழுதியை வாரியள்ளிச் சொரிந்தபடி
விரைந்தது காற்று
வரலாற்றின் பதிவேட்டில்
மேலுமொரு பக்கம்புரண்டது...
மறுநாட் காலையிலும்
கோழி கூவிற்று,
பறவைகள் இசைத்தன,
நாள் நடந்தது.
மதியம் மாலை, எனப் பொழுது முதிர்ந்து
மீண்டும் இருளாயிற்று

1998

## இருள் கவ்வ இரத்தமாய்க் கிடந்த ஒரு காலைப்பொழுது பற்றி

ஒளியின் பாதை மூடிக் கொள்கிறது
பீடம் விட்டெழுந்து தடித்த இருளிடை
கொலைக் கருவிகளுடன் அலைகின்றன
தெய்வங்கள்
மெல்லப் பரவுகிறது இரத்தவாடை
ஊர்முழுதும்
திறந்து கிடந்த கதவை அவசரமாய்
அறைந்து மூடிப் போகிறது காற்று
அப்பழுக்கற்ற பாசத்தின்
ஊற்றுக் கண்ணில் விஷம்
ஆவலாய் அணைந்த மழலை
மடியிலேயே சுருள்கிறது பிணமாய்
பால் கட்டிப்போய்
தாளாத வலியெடுக்கின்றன மார்புகள்
அனைத்தினாலும் கைவிடப்பட்ட
மனிதன்
திசையிழந்து அலைந்தலைந்து
இடுகின்ற ஓலம் வியாபிக்கிறது
எங்கும்!

2005

## இருளில் அசைகின்ற உருக்கள்

இன்றைய பகலும் கருகி உதிர்கிறது
ஒளியின் வரவும் பகலின் நீட்சியும்
என்றோ ஒரு பொழுதிற் சூழ்ந்த
இருளினைப் போக்க
இயலாதொதுங்கின...
எந்தப் பகலும் விடியவேயில்லை...
இருட்டின் மூலைக்குள் சரிந்து
கிடக்கிறது
சிறு கைவிளக்கு
நிலத்தில் உலர்ந்து போய்
வெறும் அடையாளமாய்
எஞ்சிக்கிடக்கிறது
ஊற்றுண்ட எண்ணெய்
ஓயாது தொடர்ந்தபடியிருக்கிறது
இயந்திரங்களின் ஓசை மாத்திரம் ...!

2001

## நிலை

எப்படியோ நெடுந்தூக்கத்திலிருந்து
ஏற்பட்டுப் போகிறது திடீர் விழிப்பு
கோரைப் பாய்க் கிழிசலின் உறுத்தல்
தலையணைப் பொத்தலூடு
பஞ்சுப்பிதுக்கல்
மூட்டைக்கடி
ஒவ்வொன்றாய்ப் புலன் கொண்டு
இருப்பின் நிலையுணரும் மனசு!
கலைந்த தூக்கம் தேடும் விழிகளும்
ஞாபக வரிசையில்
நேற்றைய, இன்றைய வலிகள்
கருணையற்ற காலத்தால்
வெறுவெளியில் எறியுண்டு
என்பிலியாய்த்துடிக்கும் இதயம்
எனினும்
எழுந்து சட்டைமாட்டி
செருப்புக் கொளுவி
சந்தைக்கு
நடக்கையில்
துரத்தி வந்து காதிலேறும்
"அப்பா எனக்குச் சொக்காவும்"
மன மூலையின் சிறுசுடர் தருகின்ற
உந்தலில்
தொடரும் நடை...!

2000

## விடுதலையாகி ...

உடலை உறிஞ்சிய பசி
விழிகளில்
நாவுக்கு துணையாய்
கூட்டினை நகர்த்திப் போகும்
உள்ளெரியும் தீ
காற்றிலூறிய உணவு நெடிகள்
ஊதிஊதித் தீவளர்க்கும்
மோப்பம் சாபமென்றாகி
வதைக்கும்
காவல்களின் கவனம் பிசகிய
தருணத்தின் இடைவெளியூடு

நுழைந்து இடமறிந்து பொருளுணர்ந்து
அவசரமாய்க் கவ்வி விழுங்குகையில்
எச்சரிக்கை பரவும் உடலின்
அணுவெங்கும்
ஒலியொன்றில் குலைந்து போய்
பாதி வயிற்றோடு பதறியோடுகையில்
குறி தவறிப் போகும் எறியுண்ட கல்
எதிர்ப்பட்ட வேலியின்
விலகல் வழிபுகுந்து தெருவுக்கேறி
விரைந்துகொண்டிருந்த
வண்டியொன்றின்
சில்லேறிய தலையுடன்
தப்பிப் போயிருக்கும் பசியிடமிருந்து
என்றென்றைக்குமாய்...

2006

## நெடியோடு வீசும் காற்று

எதிர்க்குரல் இல்லாது
காற்றிற்கரையும்
குயிலின் குரலில்
புகைகிற தாகத்தின் நெடி
துணுக்குறச் செய்கிறது மனசை
எப்போதேனும் எழக்கூடும் எனும்
எதிர்க்குரல் பற்றிய எதிர்பார்ப்பு
தொங்குகிறது வெளியில்
கூவல் தொடர
வெய்யில் பரவ
மெல்லப்படர்கிறது காலை...
திடுமென
எதையோ நினைத்து
எழுந்து பறந்து
எங்கோ போகிறது குயில்
தன் குரலைக் காற்றிடம் கையளித்து
விட்டு ...

2007

## அர்த்தம்

சென்ற திசையிலேயே
திகைத்தலைந்தன சில...
வில்லங்கமாய்ப் பிடித்து
அமர்த்தப்பட்டன சில
தவறான இடத்தில்
அவமதிக்கப்பட்டு
முகஞ்சிவந்து திரும்பின சில
உரிய திசையின்
இடமோ
வெறுமையாய் எஞ்ச
எனது சொற்களின் கதி
இப்படியாயிற்று
நூற்றியோராவது தடவையும்...

2004

## தழும்புகள்

என் மறுப்பில்
உன் எதிர்ப்பின்
துளிர்ப்பு
நான் கொண்ட கோபம்
அறிவிற் கவிய
உள்ளின் மிருகம்
உன் முதுகில் - தழும்புகளாய்
துடித்தலறும்
உனக்கெதிரான
காரணப்பூச்சோடு
என் தப்புதல்கள்
எல்லாம் முடிய
சிரித்தபடி
விளையாடும்
உனது முதுகிற்
சிவந்த தழும்புகளை
ஏந்தி அழும்
என் மனசு ...

1996

## பிறப்பு

என்றும் போலத்தான் அன்றும்
வெறும் பேச்சென ஆரம்பமாயிற்று
மினுக்கி நெளிந்த போலித்தனத்தில்
உள்ளம் வழமைபோற் குமுற
மன ஓட்டின் மென்பாகம்
சிறிதாய் ஒரு வெடிப்புக் கண்டதென
மீறி வழிந்தன வார்த்தை அம்மணமாய்!
இங்கிதம் நெஞ்சினடியில்!
உயரபேதங்கள் உதறப்பட்டன!
வயசும் பீடங்களும் மண்ணுட் புதைந்தன
நெடுநாட்சகிப்பின் கடையெல்லை வீசல்!
முகம் கறுத்து முறிந்தன உறவுகள்

மறுப்பும் சம்மதமும் மௌனத்தாற்
சொல்லி
நேற்று வரைக்கும் ஒதுங்கி நடந்தவன்
காணாமலே போயினான்
நெஞ்சிற் பட்டவை பச்சை பச்சையாய்
அதிர்ந்து விலகின எதிர்த்திசைகள்!
சோனாவாரிப் பொழிவின் முடிவில்
லேசாய் உணர்ந்தான்
நீண்ட நாட்களின் பின்பு வாழ்வு
அவனுடன் சிறுவிரல் கோத்து
நடையிடலானது
காகிதப்பூக்கள் கால்களினடியில்
விமர்சன ஈட்டிகளைப்
பெருந்தன்மையுடன்
வாங்கிக் கொண்டது முதுகு
பாடிநடந்தான் அவன்!

1998

## தோளணைத்த கைகளுக்கு

ஆதரவாய்த்தழுவி
ஆதுரமாய் வார்த்தை சொல்லி
கூடவந்தீர்...
நன்றி பல ...
வேதனையின் கூர்தைத்து
இதயம் துடித்து
எது செயல் என்றறியாத் தவிப்பில்
அயர்ந்து
அழுதிருந்த வேளைகளில்
கண்ணீர் துடைத்துவிட்ட
விரலை விழி ஒற்றி
நெகிழ்ந்தேன்....
வெயில் தணிய

விழுந்த குளிர் நிழலில்
நெஞ்சாறி
வாழ்க்கையிலே பார்வை
விழுத்தி
நிமிர்கையிலே
திடுக்குற்றதேன் நீங்கள்?
எனது நிமிர்வு
உம்முன்
என்ன நிகழ்த்தியது?
உங்கள்  நண்பன் நான்
“நானாய்” நடந்து செல்ல
முடிவதனை
உங்களால் ஏன்
இன்று உள்ளெடுக்க
இயலுவதில்லை?
நொந்திருந்த போதெல்லாம்
கூடவந்த பேர்கள் இன்றென்ன புதிதாய்
இறுகிய முகம் அணிந்தீர்?
அச்சம் தொட்ட மனசோடு
தனியிருந்தேன்
ஒட்டுதலும் விலகுதலும் புதிய அர்த்தம் பூண்பதனை
உணர்கையிலே
கசப்பூறும் மனசு
கனக்கிறது

2000

## ஒரு புழுக்கூட்டின் கதை

கனியின் அழுகிய பாகம் உழுது
நகரும் புழு
முகூர்த்தம் பார்த்து வெளியேறி சுயரூபம்
காட்டும்
அறிந்த முகமும் அந்நியமாகும்
பூச்சுக்கள் அணிகள் கிரீடங்கள்
அனைத்தும் இழக்கும் அர்த்தம்
எதிர்ப்பட்ட கண்ணாடிகளில் சிதையும்
விம்பம்
அழுத்தம் தாளாது வெடித்துச் சிதறும்
வீட்டின் நிலைக்கண்ணாடி
எதையுமுணராது பளபளக்கும்
நிறங்களுடன்
நின்றசையும் வெறுங்கூடு...

2001

## காணல்

தற்செயலாய்
மேசையிற் சிந்திய
தேநீர்
சுவரிற் தெறித்து
வழிகிற
வெள்ளம்
வெற்றிலை சப்பி
தெரு முதுகிற்
துப்பிய எச்சில்
உலர்ந்து கிடக்கும்
கழிப்பறை
நிலத்தில்
மெல்லப்
பரவும்
சிறுநீர்
வண்ணப்பூச்சோ
சுண்ணாம்போ
கழன்று

உதிரும்
சுவர்
ஆடையில் ஏனெனத்
தெரியாமல்
ஏற்பட்டுப்
போகும்
கறை
எதிலுமே
தெரிகிறது
பலவித
கோணத்தில்
பாவத்தில்
மனுஷ முகம்
உதிர்ந்த
சருகு
மேலும் உலர்ந்து
முறுகிப்
போகையில்
அடுத்த வீட்டு
ஆச்சியின்
முகமாய்
தெரிவதேன்
என்று
தேரியவேயில்லை

1996

## முடிவிலியான ஒரு துயரிசை குறித்து

வேண்டுதல்களும் ஏக்கங்களும் படர்ந்த
முகங்களுடன்
நிரப்பப்படாத வெற்றிடங்கள்
எதிர்த்திசைகளிலும் அருகாமைகளிலும்
தம்மையொத்தவைகளின் நிரம்பல்கள்
உறுத்தும்...
நிரம்புவதற்கான வாய்ப்பினைத்தேடி
பரபரத்துத் தெரிந்தவைகள்
பொருந்தாதென அறிகையில்
உடைந்து போகும் இன்னுமின்னுமாய்
ஒதுக்கப்பட்டவைக்கருகில்
மேலும் வெற்றிடங்கள்
இணையைப் பிரிந்த குயிலும்
இடதைத் தொலைத்து விட்ட
வலக்காற் செருப்பும்
உரிமையாய் ஏறெடுக்கும்
அந்த வெற்றிடங்களை ...
கேட்டதுண்டா நீங்கள் ...
மெலிதாய்க் கசிந்தபடியிருக்கும்
வெற்றிடங்களின் துயரிசையை ....?

2006

### கண்ணே உறங்குறங்கு

சொப்பன வலையை
அறுத்து விடாதே
சுருண்டு கிட அதற்குள்ளே
போதை மூட்டம் கலையாது
பார்த்துக்கொள்
விழித்தல் நிகழா தொழியட்டும்
நம்பு அது அன்புதான்
இனிக்கும் வார்த்தைகள் சத்தியம்!

புன்னகையின் நேசம் மெய்!
உபசரிப்பின் பரிவு மெய்!
பற்றிக் கொள்ளும் கையின் இறுக்கம்
உதவ முன்வரும் மனசின் தாராளம்
தலைசாய்க்கும் மடியின் இதம்
எல்லாமும் உண்மை
நம்பு நம்பு
பிரமைகளின் லாகிரி
தொடர்ந்துன்னைத் தாலாட்டட்டும்
நிஜமறியும் உந்தல்
உரைத்துப் பார்க்கும் முனைப்பு
அதைப் புறக்கணி
நிஜத்தின் குரூர முகதரிசனத்துக்கு
ஏனிந்த ஏக்கம்?
இருளிலேயே இருநீ...
கலையா மயக்கத்தில்
இருளின் அழகுபாடு
வாழிய நீ
வளர்க நின் துயில்!

1998

## மூன்று பொம்மைகள்

விளையாட்டுக் குழந்தை
பாகம் பாகமாய்ப் பிரித்துப் போட்ட
பொம்மையை
சரி செய்யும் பணியில்
நீயும் நானும்
கழுத்தோடு நிற்கமறுத்து
அல்லாடுகிறது பொம்மைத்தலை
கால்களும் கைகளும் கூட
பொருத்தப்போன இடங்களை
நிராகரித்து அடம்பிடிக்கின்றன
ஒருவாறு எல்லாவற்றையும்
சரிக்கட்டி நிமிர்கையில்
கண்ணிற்படுகிறது

கடந்து கொண்டிருந்த
வருடவரிசையில்
மேலுமொன்றினது முதுகு
ஓசையெழாமல்
குழாய் வழி வழிந்து
வெளியேறி விட்ட
தாங்கித் தண்ணீராய்
வீணாகிப்போனவாழ்வுபற்றி
ஒரு கணம் துணுக்குறும் நெஞ்சு
வேலைகளூடும்
தூக்கத்தினூடும்
எல்லாவற்றையும் (?)
மறக்கின்ற எத்தனத்தில்
காலத்தைக் கரையவிட்டு
தலைவெளுப்பைப் பறைசாற்றும்
நிலைக் கண்ணாடியோடு
சமாதானமாகி
உரையாடுகின்றேன் நான்
உன் தலையில் நரைமுடி தேடிப்
பிடுங்கிய படியிருக்கிறாய் நீ

2006

## கலையும் பொழுது

மனக்குகையிருளில் மேலும்
சேகரமாயின நினைவுகள்...
எவரெவரையோ குறித்த எவரெவர்க்கோ
எப்போதோ சொல்லியிருக்க வேண்டிய
எண்ணிலா நினைவுகள்
அவரவர் பெயர்களைத்
தம்மீதெழுதிவைத்துத்
துயிலுமவை...
எதிர்பாராமல் விழுங் கல்லில்
தவங்கலைந்து
நீர் வளையங்களாய் விரிந்து பரந்து,
விரிந்து பரந்து
அமிழ்ந்தகலும் ஒரு சமயம்
துயரின் கனதியாய்,
ஆனந்த உச்சமாய்
இழப்பின் சுவடாய்
ஏக்கத்தின் பதிவாய்
வரிசை கொள்ளுமென்
துயிலும் நினைவுகள்....

2000

## தரிசனம்

திடீரென என்முன்
பிரசன்னமானாள்
அம்மா...
பரிவு கண்வழி
வழிந்து தழுவிற்று...
மென் குழைவு
மருந்தாய்த்
தடவுண்டன வார்த்தைகள்
காயங்களில்...
வலிகளைப் புரிந்து கொண்டு இதம் செய்தாள்
அம்மா ...
இப்படியாய்...
உயிர் பெய்த நிமிஷங்களை
நெஞ்சத்தில் நித்தியமாக்கி விட்டு
படியிறங்கி
நடந்து கொண்டிருந்தாய்
நீ ...!

2004

## ஒரு பின்மாலைப் பொழுதில்

விடியும் என்னும் மனசின் துளிர்
கருகியது மீண்டும்
சலியாது எனக்கொரு வாழ்விற்காய்
நடையுற்ற கால்களும்
களைப்புற்றொதுங்கின முதுமையில்
சுமந்த வயிறும் எரிந்து சபித்து
கொள்ளையிற் போவோரின்
பேராசையைப் பாரெனப் புலம்பிப் பின்
அடங்கிப் போயிற்று ...
நாற்சார் வீட்டின் மூலைவாங்கில்
பழுத்துப் போன ஏடுகளோடு
வழக்கம் போலவே
பத்திரப்படுத்துவாளென
எதிர்பார்த்துக் கிடந்தது சனன சாதகக்
குறிப்பு...
நரைகாட்டிய நிலைக்கண்ணாடி முன்
உடைந்து துகள்களாயிற்று
எனது பிம்பம்
கண்களோடு கரைந்தது
கனவின் கடைசிச் சாயலும் ...

2007

## தன்னுலகு

தொட்டி விளிம்புவரை நிரம்பி
ததும்புகிறது நீர்
சிறிதாயெனிலும் ஓர் அழுத்தம்
நேர்கையில்
வெளியேறி ரகசியமாய்
சுவர் தழுவி  வழிகிறது...
வீசும் சிறு காற்றில் சிற்றலை
நெளிவுகளோடு
நர்த்தனமிடுகிறது...
தொட்டியின் அடிப்புறப் பாசியின் பச்சையை
தனது நிறமெனக் காட்டிடமுனைகிறது
வெய்யிற் பொழுதிற் சூடாகியும்
நிலவொளி வருடலிற் குளிருற்றும்
வாழ்வொன்றியற்றிட முயல்கிறது
வெய்யிலோடு நாள் தோறும்
தான் ஆவியாவதுணராமல்

2008

## மழை

மழை ஓய்ந்து
வெயிலடிக்க ஆரம்பித்த பிறகு
நீர்தேங்கி நின்ற ஈரச்சுவடுகளில்
பதிந்திருக்கின்றன இரண்டு விழிகள்
எட்டிப்பார்க்கும்
கடந்த மழைபற்றிய ஞாபகங்கள்
பெரும் பொழிவாய்...
ஒரே லயத்தில் தொடரும்
நெடு நேர வார்ப்பாய் ...
சிறு பெய்தலாய் ...
காற்றொடு பறக்கும்
ஊசித்தூறலாய் ...
மழை . மழை... மழை...
ஈரமுறிஞ்சிய
காற்றின் தடவல் ...
அது தரும் இதம் எல்லாம்
கடந்த காலமென உறைந்து போக
தொடரும் வெயிலிடை
வளரும் நினைவுகளோடு
ஈரச்சுவடு பார்த்திருப்பவனின்
கவனம் கலைக்கும்
ஈரம் வற்றிய
ஒரு குரலின் அதட்டல்...!

2005

## நடுப்பகலும் நண்டுக்கோதும் அண்டங்காகமும் ஒரு உறைந்த மனிதனும்

மணலும் உருகும்
நடுப்பகல் கொடுவெய்யில்
இடையிடை மனிதரும்
தோல்வற்றி எலும்பெடுத்த
மாடொன்றும்
தெருவழிபோக
சந்தியில் நிற்கிறான் உறைந்த மனிதன்
கல்லிற் சமைந்த
முகத்தின் சலனங்கள்
வாசிப்போரற்று
வெறிதே கிடக்கும்
வாழ்ந்திருந்த காலத்தே
அழுந்த எழுதப்பட்ட

அவனது இருப்பு
இன்று வெறும் நினைவின் சுவடுகளாய்
அங்கங்கே...
எங்கிருந்தோ பறந்து வந்து
அவன் தோள் மீதமர்கிறதோர்
அண்டங்காகம்
அலகிடை ஒரு நண்டுக்கோது
கால்களிற் கோதுபற்றி
எஞ்சியிருக்கும் துணிக்கைகள்
கொத்துகையில்
கோதில் மீந்த ஈரம்
மெல்லப்பரவும்
இவன் தோளில் ...
ஈரத்தில் இவன்
சிலிர்த்தமையோ
காற்பிடி வழுவி
கோது விழுகையில்
முகத்தின் சலனங்கள்
மாறியமையோ
பற்றி ஏதும் அறியாது
எழுந்து பறந்து
போகிறது
காகம் ...

2008

## பிழைக்கத் தெரிந்தவன் நீ

இறுகு
ஈரம் துடைத்தெழு
சலனந் துறந்து கல்லாகு
அறுத்தெடுத்த கண்ணாடித்துண்டங்களை
தட்டிலிட்டுப் பரிமாறு
அதோபார் உன் அயலான்
தன் பைகள் நிறைத்து
வெளியேறுகிறான்
சமயோசித ஆயுதத்தைப் பிரயோகி
வலியறியாமல் வீழ்த்து அவனை
போர்த்து அவன் உடலை
உன் தோள்துண்டால்
தேன் தெளித்து பரிசு பெறு அவன்
கம்பளியை....
மறைவான பேரங்களில் விலைபேசு
பீடங்களை
வெள்ளைத்திரைகளின் பின் முகம்காத்து
நடமாடு
ஏமாளிகளின் பிரமிப்பில் திருப்தி பெறு
பிரமாண்டமானது உனதுலகம்
உன்போன்றோர்க்கானது இந்த யுகம்

2005

## வேரடி மண்ணில்

தற்செயலான ஒரு தடவலில்
தட்டுப்பட்டது
அந்தத்தழும்பின்மேடு
அதன் வேர் தேடிப்பயணமாயின
நினைவுகள்
திரையில் நிழல்களாய்
முகங்களும் நிகழ்வுகளும்
கணநேர வெளிச்சம்!
தழும்பும் காயமும்
வலியும் துயரும்
எனக்கே தான் என்றிருந்தேன்
உடைந்தது
அம்மன விம்பம்
வேரின் நுனி பதிந்திருந்த
மண்ணில்
பரவி உறைந்திருந்தது
உனது கண்ணீர்!

2008

## வெளிகளும் மூலைகளும்

சிரிப்புத் தவழப் படியேறும் புதிய முகம்
மகிழ்ச்சி தருகிறது...
கேளாமலேயே சிரமமுணர்ந்து உதவ
முன்வரும் கைகள்
நம்பிக்கை தருகின்றன...
துயரவதைப்பில் உயிரொடுங்கி
அமர்கையில்
பார்வையால் புரிதல் காட்டி மௌனமாய்
அருகமரும் துணை
தெம்பூட்டுகிறது...
அழுகை தொண்டையிலடைக்க
விழிபனித்துத் தணிகையில்

ஆதரவாய்க் கையை அழுத்தும் சிநேகம்
இதமாயிருக்கிறது.
உரிமையாய் மடியமர்ந்து
வெள்ளைச் சிரிப்புடன்
நாடி தொடும் பிஞ்சுக்கை
மனசை நிறைக்கிறது.
ஒரு விசேஷமான செயலூடு
அடிமனப்பிரியத்தை வெளிக்காட்டும்
இனிய உறவு
வாழ்தலில் ஆர்வம் தருகிறது...
கூடவே இருப்பினும் மனசுக்குள்
கோடிழுத்து
தனதென்றும் உனதென்றும் வகை
பிரிக்கும் உறவு மட்டும் அச்சுறுத்துகிறது
எப்போதுமே

1999

## காடு

அடர்காடு
கணிப்புக் கெட்டாக்காலம் முதல்
வளர்ந்து வளர்ந்து
விரிந்து பரந்து
இருள் மூடிக்கிடக்கிறது ...
பரிதி புகாத
தடிப்பினை ஊடறுத்து
அங்கங்குள்ள
இடைவெளியூடாய்
நுழையும் ஒளி விரல்கள்
பொட்டிடும் நிலத்துக்கு

தருக்களை - இலைகளை
மலர்களைத் தழுவி
தவழும் காற்றின் கதம்ப மணம்
அறியப்படாத தொலைவில்
சலசலத்தோடும் அருவி
எதிர்பாரா ஒரு கணத்தில்
குப்பெனக் கிளம்பி
நாசியை மூடும்
ஒரு விசித்திர வாசனை
சில கணங்களில்
அதை அமிழ்த்தி எழும்
சுகந்தம்
பறவைகளின்
குதூகலக்குரல்கள்
அழைக்கும் ஓசை
பதிற்குரல்
எங்கோ இருந்து ஒரு அகவல்.
ஒரு பிளிறல்,
ஓர் உறுமல்,
ஒரு கதறல்,
கலந்தொன்றாய்
உயிர்ப்புடன் அசைகிறது காடு
பெருங்காடு

2000

## தரிசனம்

திடீரென ஒரு நாள் இனிப்புப் பூச்சுகள்
கரைந்துபோயின
உள்ளீடு நாவைத் தொட்டுத் தன் மெய்ச்சுவை சொல்லிற்று
எழுந்த குமட்டலில் ... எதிரே
நிஜத்தின் குரூரமுகம்
பழைய பசுங்கனவு சோப்பு நுரைக்
குமிழியாய்
காற்றில் மெல்ல மிதந்து போயிற்று!

1998

## கறைபடும் ரகஸ்யங்கள்

புண்ணில்
உறுத்தும்
முள் முனையாய்
என்னுள்ளிருந்து
படுத்தியது பாடாய்
தாளாமல்
ஒரு நாள்
முழுவதுமாய் ஒப்புவித்தேன்
நட்பின்
கற்பில்
நம்பிக்கை வைத்து
பகிர்தலில்
படர்ந்தது ஆறுதல்
நாள் சில கடக்க
எதிர்ப்பட்ட
சாக்கடை
கைகால் கண் மூக்கோடு
என் முள்ளை
உமிழ்ந்து போனது ...
அதிர்ந்து உடைந்தேன்
நம்பி நடந்து
காலொடிந்து ஒதுங்கிவிடும்
கூட்டத்தோடொருவனாய்
குந்தினேன் போய்...

1998

## கூடிழிந்த ஒரு பறவைக்குஞ்சின் கதை ...

கேட்கிறதா உனக்கென்
உயிரின் பாடல்?
தாய்மடி தேடும் மழலையின்
கதறல்!
எங்கெங்கென
அலைகிறது மனசு
இசைக்கும் பாடலின் வேர்கள்
எந்தன் தாயிடமிருந்தன
பரிவின் உருவென வாழ்ந்தவளின்
நிழலில் ஆறி உறங்கிய உயிரோ...
கூடிழிந்த குருவிக்குஞ்சாய்
தீனக்குரலெழுப்பி அரற்றுகிறது
தாய் ஊட்டும் தீனிக்காக.
அந்தப் பிஞ்சழும் குரல்
பூமியைக் கீறிப்போகிறது...
காகமோ பருந்தோ
எந்த நிமிஷமும் இறாஞ்சிப் போகலாம் அதை
நீ வருதல் கூடுமோ
அப்பிஞ்சின் பதகளிப்பாற்றி
பரிவின் பாலூட்ட...?

2005

## இருப்பு

பாளங்களாய் பிளந்த நிலம்
வானத்திடம் கையேந்திப்
பெற்ற வெம்மூச்சு
காற்றாக .....
கூடிநின்று கூத்துப் பார்த்துவிட்டு
விலகிப்போகும் மழைமேகம்
தூறலோவென ஐயங்கிளப்பிய
மந்தாரம் விலக
சிரிக்கும் வெய்யில்
புழுதியள்ளிப் பறக்கும் காற்றிற்கும்
வேடிக்கையாகிறது
நிலத்தின் வேதனை.

2007

## காற்றோடு கலப்போம்

உள்ளெரியும் பெருந்தீ உனக்கும்
எனக்கும் பொது
நீ தனி நானும் தனி
எரிதல் இருவர்க்கும் பொது
தணிக்க வேண்டிய நீ தனி நானும் தனி
தாகத்தில் வறண்டு தீயினில் எரிந்து
பொசுங்கி நீறாவோம்
உனதும் எனதும் சாம்பல் காற்றுக்குப்
பொது
காற்றள்ளிப் போகட்டும்
உன்னையும் என்னையும் ஒன்றாய்!

1986

## இரண்டு பேர்

இருவர் அமரத்தக்க
இருக்கையினைத் தான்
பகிர்ந்து கொண்டோம்
நான் யன்னலோரமாகவும்
நீ என்னருகிலும் அமர நேர்ந்தமை
தற்செயலானது தான்
யன்னல் வழி வீசிய காற்றும்
காட்சி தரிசனங்களும்
திட்டமிட்டுப் பெற்றவையல்ல

நீயோ
அவற்றை என் அதிர்ஷ்டங்களென
எண்ணிக் கொண்டாய்
நின்று பயணித்தவர்களால்
நீயடைந்தசங்கடங்கள்
நெடுமூச்சுக்களானதை நான்
உணரத்தவறிப் போனேன்
ஏதோ ஒரு கணத்தில் உன் குரலில்
தொனித்த குரோதத்தின் கந்தக நெடி
நாசியைத் துளைக்க
திடுக்குற்று நிமிர்கையில்
நீ வெகுதூரம் போயிருந்தாய்
ஒன்றாய்த் தொடங்கிய பயணம்
இடை உடைந்தது
இறங்கி நடந்தோம்
எதிரெதிர்த் திசைகளில்
நாம் பகிர்ந்த இருக்கையில்
வந்தமர்ந்தனர்
வேறு இருவர்.

2006

## தீய்தல்

அனல் வழியென நீண்டு கிடந்தது
பாதை
மெல்ல வீசிய காற்றும் வெம்மையேறித்
தகித்தது
நடைத்தூரம் பெருந்தொலைவாய்
அயர்ச்சி தர
வரவேற்க ஒரு முகமுமில்லா வெறும்
வீட்டின்
கதவு திறக்கிறேன்...
பகலிலும் இருள் விழுங்கக் கிடந்த
வீட்டின் உள்
எதிர்கொள்கிறதென்னை வெறுமையாய்
தொலைதூர மழலை அழுகையொலி
மீட்டிப்போகும் எதையெதையோ ...
முகமுள் அளையும் விரல்களோடு
வெம்மைக்குச் சலித்து யன்னல் திறந்து
ஆடைமாற்றுகையில் உள்நுழைந்த
காற்று
வருடிப் போகும்
என்றோகொடியில் உலரப் போட்ட
சேலையையும்
என்னையும்...

2003

## வலி

விலக்க விலக்கக் கவிகிறது மூட்டம்
மீண்டும் மீண்டும் காயம் பார்த்துக்
கசியும் விழிகள்
வீக்கந் தடவும்விரல்கள்
உள்ளமர்த்தி, உள்ளமர்த்தி
அடங்கினாலும்
முடியாதெனத் துரத்தி நிற்கும் முட்கள்
தடைமீறி வெடித்தெழும் அரற்றல்கள்
மெல்லப் படரும் ஈரம்
காலடியிற் கிடக்கும் கற்களை
எடுத்துக் கொண்டகைகள்
கூர் முனைகளை ஸ்பரிசிக்கும்
வேகமாய் வீசுண்டு வருகையில்
மென்தசை குத்திக் கிழித்த
கருணையின்மை
வெறுங் கூழாங் கல்லாய்
அமைதியுற்றுக் கிடக்கையில்
அகன்றெங்கோ போயிருக்கும்
விசையூட்டி வீசிய திசைகள்
கண்காது இதயமற்று
முகமிறுகி மௌனம் காக்கும்
அடையாளங்களை மட்டும் சுமந்தபடி ...

2004

## நிறைவு

கோலாகலமாய் ஆரம்பமானது பெருவிழா
சரிகை மினுமினுப்புத் தெரியும் படியாய்
மடித்து அழுத்தப்பட்ட பட்டுச்சால்வைகள்
படிந்து கிடந்தன
உள்ளேறிய கிறுதியில் அசையும் கழுத்துகளில்
அந்தப் பொழுதுக்கேயான மொழியில்
போதையூற வார்த்தையாடினர் அவர்கள்
பார்வையாளர் நிறைந்த மண்டபத்தை
மேய்ந்தன அவர் விழிகள்
நிரம்பிய வரிசைகளில் அவை படர்கையில்
தம்மைத்தான் பார்ப்பதான பிரமையில்
புன்னகைத்தனர் சிலர்
பெருமை கொப்பளிக்கும் முகபாவத்தோடு

பார்வை விரிக்கையில்
கண்ணில் உறுத்தின வெற்று நாற்காலிகள்
நிரம்பிய வரிசை தந்த மகிழ்ச்சியை
சிறிது சிறிதாய்த் தின்று தீர்த்தன
அந்த வெற்று நாற்காலிகள்
அன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெறாத
வெற்று நாற்காலிகள் பற்றிய
உரைகளும் விமர்சனங்களும்
ஒலிவாங்கிகளை வெப்பமாக்கின
சூடேறி உருகிய மூளை
மஞ்சள் திரவமாய்
மண்டப நிலத்தில்
பரவலாயிற்று!

2007

## கனவு

முழுவதுமாய் நிரம்பிவிட வேண்டும்
என்பதே கனவு
மட்டம் சிறிது சிறிதாக
உயர்ந்து வருவதாய்
உணரப்படுகையில்
மனசு பொங்கும்
அருவிக்கு நேர்கீழாய்
அமர்ந்திருப்பதே போல்
பரவச முறும்
ஒரு சமயம்
விலகிப் போய்
வெகுதூரம் எறியுண்டு போவதாய்
ஏக்கம் கவ்வும்
மனமூலை ஒளிப்பொட்டு
சுடர்விடுகையில்
மீண்டும் துளிர்க்கும் கனவு...

முழுவதுமாய் நிரம்பி விடவேண்டும்
ஒரு நாள்!

2000

# பின்னுரை

## சொற்களால் சொற்களைக் களைதலும் சத்தியபாலனின் கவிதை நூலும்

ஒரு சொற்றொடர் எப்போது இலக்கியமாகிறது என்ற கேள்வி இலக்கியக் கல்வியிலும், ரசனையிலும் பிரதானமானது. ஆனால் எமது இலக்கியக்கல்வி இதற்கு எதிரிடையானது. அது சொற்களுக்குப் பதவுரைகள், அரும்பதவுரைகள் கூறும் மேலோட்டமான உரையாசிரியர் மரபுக்குட்பட்டது. இந்த இலக்கியத்தினை அகராதிக்குள் வைக்குஞ் செயற்பாடுகள் எமது கலாரசனையை எம்மையறியாமலே மிகவும் பாதித்துள்ளன. இந்தப் பார்வைதான் காண்பியக் கலைகளிலும், ஆற்றுகைக்கலைகளிலும் கூட 'அர்த்தம் புரியவில்லை' அல்லது 'இதற்கு என்ன அர்த்தம்' எனும் கேள்விகள் புறப்படும் புள்ளியாகும். உண்மையில் எங்களில் பலருக்கு காண்பியக்கலைகளும், ஆற்றுகைக்கலைகளும் தான் புரிவதில்லை என்றில்லை, இலக்கியம் கூட அதன் சரியான பொருளில் புரிவதில்லை. பதிலாக அது எழுதப்பட்ட மொழியும், அதற்குரிய அகராதிப்பொருளும் நமக்குப் பழக்கமானவையாக - பரிச்சயமானவையாக உள்ளன அவ்வளவு தான். உண்மையில் இலக்கியம் அவற்றிற்கு வெளியால் ஒரு பக்கிரி போலத் திரிந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் கலைகள் அர்த்தங்களைக் கூறுவன அல்ல என்பதனையும் பதிலாக அனுபவங்களையும்- அதனால் வாழ்வு பற்றிய பரந்த புரிதல்களையும் இடைவிடாது உற்பத்தி செய்வதற்கான தருணங்களே என்பதனையும், வாழ்வு தொட்டுப் படைப்பாளிக்குக் கிடைக்கும் தரிசனங்களில்

இருந்தே அவை உற்பத்தியாகின்றன என்பதனையும் எடுத்துக் கூறுவதற்கான எந்தவொரு சிறியவொரு பாதையும் எமது இலக்கியங் கற்பித்தல் - ரசித்தற் பாரம்பரியத்தினுள் இல்லை. இது கலைஞர்களும்-கலைகளும் பாவிப்பரந்து சுவற முடியாத ஒரு பண்பாட்டுப் பாலைநிலத்தினை இடைவிடாது உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது என்பது மிகமிகத் துரதிஷ்டவசமானது. இந்த பிறழ்ச்சியின் வேர்கள் எங்குள்ளன? என்பதும்-அதனை மாற்றியமைப்பதற்கான செயற்பாடுகளும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றன.

வார்த்தைகளை, அவற்றின் 'நிர்ணயகரமான அர்த்தங்களை' இடைவிடாது உடைத்துத் திறந்து முடிவில்லாது செல்லும் ஒரு மனமூட்டத்தின் பயணப்பாதையிற்தான் இலக்கியங்கள் சித்திக்கின்றன. இன்னொரு விதமாக இதனைக் கூறுவதாக இருந்தால் சொற்களின் நிர்ணய அர்த்தத்திற்கு எதிரிடையான முடிவில்லாத சவாலாக இருத்தலே இலக்கிய ஆக்கலின் அடிப்படைச் செயற்பாடாக இருக்கிறது. அதனால் வாழ்வு பற்றிய முடிவற்ற உரையாடலாக இலக்கியம் காணப்படுகிறது. தட்டையான, இடைவிடாது திறபடும் அர்த்தங்களின் பலநூறு அடுக்குகளாயில்லாத- அனுபவங்களின் பெருவெளிக்கு அள்ளிச் செல்லாத எந்தவொரு சொல்லும் இலக்கியத்திற்குரித்தானதல்ல.

எங்களில் பலர் நம்புவது போல வார்த்தைத் தொட்டிகளும், அரிதாரம் பூசி மினுங்கும் சொற்களும், சிறியதும் - பெரியதுமாக கத்தரிக்கப்பட்டு அடுக்கப்பட்ட சொற றொடர்களுமல்ல இலக்கியம். இலக்கியம் சொற்களின் மேலுந்துகை நிலையும், சொற்களால் சொற்களைக் களையும் ஒரு ஆக்கச் செயற்பாடுமாகும். அதற்கு மரபென்றும் - நவீனமென்றும் எந்தப் பிரிவுமில்லை. பதிலாக இருப்பினை இன்மையாலும் - இன்மையை இருப்பினாலும் உலுக்கிவிடக்கூடிய, உயிரை வேகவைத்து விடக்கூடிய, வார்த்தைகளாலவை ஆகியுள்ளனவா? என்பது மட்டுமே இலக்கியம் தொடர்பாக நம்முன்னுள்ள அடிப்படைக் கேள்வியாகும்.

அவரவருக்கு அவரவர் பாத்திரங்கள்: அவரவர் கிண்ணங்கள். சத்தியபாலன் 'மனவோட்டின் மென்பாகம் வெடித்து' வடியுமொரு திரவத்தைத் தன் கிண்ணத்தில் ஏந்துகிறார். கசப்பும், சோகமும் அதன் பிரதான உள்ளீடுகள். வாழ்வு பற்றிய வியப்பும், நேசமும் அவற்றில் கலந்துள்ளனவாயினும் அதன் தொனிப்பொருள் என்னவோ அடிப்படையில் துக்கம் தான். யாவும் 'சுடரவிந்து வெண்கோடாய்' போய்விடுகிற, 'நாம் அமர்ந்த இருக்கையில் வேறு யாரோ வந்தமர்ந்து' விடுகின்ற யதார்த்தங்களால் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் சத்தியபாலன் 'வாழ்வதற்கான எத்தனங்களே வாழ்வாகிப்போய்விடுகின்ற' நியதியின் முன் துக்கித்த பார்வையாளனாகவும் - விலகிச் செல்ல முடியாத பங்காளியாகவும் நின்று கொண்டிருக்கிறார்.

'கேட்டதுண்டா நீங்கள்....
மெலிதாய்க் கசிந்து கொண்டிருக்கும்
வெற்றிடங்களின் துயரிசையை....'

(முடிவிலியான ஒரு துயரிசை குறித்து)

என முடிவிலியான ஒரு துயரிசை குறித்து வினவும், அவரது துக்கம் ஒரு (பல) வகையில் அரசியலின் பாற்பட்டது. இங்கு அரசியல் என்பதை ஆதிக்கம் - அதிகாரம் சம்பந்தப்பட்ட எதனையும் குறிக்கும் பரந்த அர்த்தத்தில் கையாளுகிறேன். அவ்வாறு பார்க்கும் போது அனைத்துப் படைப்புக்களும் அரசியற் தன்மை வாய்ந்தவையும், மனிதர்களுக் கிடையிலான வெவ்வேறு வகைப்பட்ட சொற்களாலும் - கருத்துக்களாலும் - உறவுமுறைகளாலும் ஆக்கப்பட்டுள்ள ஆதிக்கம் / அதிகார வலைப்பின்னல் சம்பந்தப்பட்டவையுமாக உள்ளன.சத்தியபாலனின் கவிதைகள் தனிமனித (சமூக) உறவுகள், இனத்துவ நெருக்கீடுகள் சார்ந்த அரசியலுடன் அதிகம் தொடர்புபட்டுள்ளன. அவை மனிதர்களைக் கொத்தி வீசி - சுண்ணாம்புக் காளவாயிலிட்டுச் சுடுகின்றன.

அவரது 'இரண்டு பேர்', 'கூத்து', 'நடுப்பகலும் நண்டுக் கோதும் அண்டங்காகமும் ஒரு உறைந்த மனிதனும்', 'நெடியோடு வீசும் காற்று', 'இருள் கவ்வ இரத்தமாய்க் கிடந்த ஒரு காலைப்பொழுது பற்றி', 'ஒரு புழுக் கூட்டின் கதை', 'அர்த்தம்', 'இன்னுமொரு நாள்', 'தரிசனம் 1', 'மூன்று பொம்மைகள்', முதலியன கவித்துவச் செறிவுடைய அவரது இவ்வகைப்பட்ட முக்கிய கவிதைகள் எனலாம். துக்கமும், பயங்கரமும் அவற்றின் உள்ளோடிக் கொண்டிருக்கின்றன. மேற்படி நிலவரங்களின் நெருக்கீடுகள் அதிகரிக்கும் போது கவிதைகளில் வார்த்தைகள் உருகி காட்சிப் பரப்பாகிக் கொள்வதனையும் -படிமநிலை கொள்வதனையும், வார்த்தைகள் தணலாகி எரிந்து சாம்பலாகிப் போவதனையும் பார்க்கிறோம்.

சூடேறி உருகிய மூளை
மஞ்சள் திரவமாய்
மண்டபத்தில்
பரவலாயிற்று!

(நிறைவு)

கோரப் பற்கள் துருத்திய வாயொடு
குதித்தாடத் தொடங்கியது இருள்

(கூத்து)

புகைகின்ற தாகத்தின் நெடி

(நெடியோடு வீசும் காற்று)

சென்ற திசையிலேயே
திகைத்தலைந்தன சில.....
வில்லங்கமாய்ப் பிடித்து
அமர்த்தப்பட்டன சில.
தவறான இடத்தில்
அவமதிக்கப்பட்டு
முகஞ் சிவந்து திரும்பின சில.

உரிய திசையின்
இடமோ
வெறுமையாய் எஞ்ச
எனது சொற்களின் கதி
இப்படியாயிற்று
நூற்றியோராவது தடவையும்..............!

(அர்த்தம்)

வெறு வெளியில் எறியுண்டு
என்பிலியாய்த் துடிக்கும் இதயம்

(நிலை)

ஏதோ ஒரு தருணத்தில் உன் குரலில்
தொனித்த குரோதத்தின் கந்தக நெடி
நாசியைத் துளைக்க
..........
ஒன்றாய்த் தொடங்கிய பயணம்

இடை உடைந்து
இறங்கி நடந்தோம்
எதிரெதிர்த் திசைகளில்...

நாம் பகிர்ந்த இருக்கையில்
வந்தமர்ந்தனர்
வேறு இருவர்.

(இரண்டு பேர்)

எனும் கவனத்தைக் கோரத் தகுந்த வரிகளாலான அவரது கவிதைகள் திமிறிப்பாய்தலின் பொருட்டாக மேலுஞ் சில விடயங்களைக் கவனித்தல் நன்று எனத் தோன்றுகிறது. பல இடங்களில் மௌனத்தின் பாதாளங்களைச் சொற்களிட்டு சத்தியபாலன் நிரப்பி விடுகிறார். கவிதை சொற்களாலும் – சொல்லிடை மௌனத்தினாலும்தான் பிரதானமாக உருவாகிறது.

கவிதை அதன் உச்ச நிலையை எய்தும் போது சொல்லே உள்ளடங்கி மௌனமாகிவிடுகிறது. சொல்லிலடங்காப் பேரமைதி அங்கே பெய்யப்படுகிறது. இவ்வாறு மந்திரப் பேறு எய்தும் வார்த்தைகள் மனதைச் சாகடித்து நம்மைத் தூக்கி உண்டு விடுவன.

இது கவிதையாக்குதலில் முக்கியமான விடயமாகும் என்ற போதிலும் இது அடிப்படையில் உள்ளடங்கி இருப்பது கவிதையின் ஒழுங்கமைப்பு (composition) எனும் பிரதான களத்தினுள் ஆகும். வார்த்தைத் தெரிவுகள் - அதன் அருகிருக்கும் வார்த்தைகள் - வார்த்தைகளின் சாதாரணமான, அசாதாரணமான இடமாற்றங்கள், மற்றும் அவை எவ்வளவிற்கு ஒன்றால் ஒன்று உருவாகின்றன - எவ்வளவிற்கு ஒன்றால் ஒன்று விரிக்கப்படுகின்றன என்பதும் கவிதையில் முக்கியமானவை. ஏனெனில் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு வரியும் ஒன்றை ஒன்று திறக்கின்றன - ஒன்றின் உயிர் இன்னொன்றில் தங்கியுள்ளது. அந்த இன்னொன்று வேறொன்றினுட் கலந்துள்ளது. அது ஒரு முடிவில்லாத யாத்திரை. சொல்லிற் தொடங்கி, சொல்லின்மையில் முடியுமொரு யாத்திரை.

கவிதையைக் கட்டும் முறை அல்லது கட்டமைப் பிலேயே சொற்கள் தம்மிடம் பிறழ்ந்து அர்த்தங்களின் புதைகிடங்காய் - முடிவற்ற பயணங்களிற்கான பயணப் பாதையாக மாறுகின்றன என்பதனால் கவிதை ஒழுங்கமைப்பின், சீவநாடியாகக் கட்டமைப்பு காணப்படுகிறது. அது ஒரு வகையான சொற்களைப் புணர்த்தும் முறையும், கட்டும் முறையுமாகும். பிரக்ஞையும் - பிரக்ஞையின்மையும் கட்டமைப்பினுள் காணப்படுகின்றன என்பதோடு படைப்பாளிகளின் ஆழமும் - தனிச்சிறப்பும் கூட அதனுள்ளே மண்டியுள்ளன.

சொற்களிற்கிடையிலான சமநிலை - அவற்றிற் கிடையிலான மூச்சுவிடுவெளி என்பன கவிதையில் மிகமிக முக்கியமானவை. ஒவ்வொரு சொல்லும் படைப்பாளி யிடமிருந்து தனக்கான இடப்பரப்பைக் கோருகின்றன.

ஒவ்வொரு சொல்லும் தனக்கான பாதையையும் - பயணத்தினையும் கொண்டுள்ளது. ஒரு வகையில் படைப்பாளி என்பவன் சொற்களையும் - அவற்றின் இரகசியமான- சூசகமான பயணப்பாதையையும் கண்டுபிடிப்பவன். அதனால் அவற்றை வசியப்படுத்துபவன்.

அதிலுங் குறிப்பாக வரிகளுக்கிடையில் முனை மழுங்காது பாய்ந்து செல்லும் இடையுடையா வலு (energy) கவிதையில் மிகமிக முக்கியமானது. ஏனெனில் கவிதை என்பது அதில் இடம்பெறும் சில சொற்களோ - சில வரிகளோ மட்டும் அல்ல. பதிலாகக் கவிதையின் ஒட்டுமொத்தப் பின்னுகையும் - ஓட்டமும் தான். ஆனால் தமது படைப்பாக்கச் செழுமையால் ஒரு சொல்லாலோ - ஒரு வரியாலோ முழுக் கவிதையிலும் தீ மூட்டிவிடும் படைப்பாளிகள் உண்டு. எதுவாயினும் இடையுடையா வலுவும், மேலும் மேலும் மேலேறிச் செல்லும் பறப்பும் கவிதைக்கு முக்கியமானவை. உண்மையில் கவிதையின் கூறுகளாக இனங்காணப்படும் இவை யாவும் நடைமுறையில் ஒன்றினுள் ஒன்று கலந்து திரண்டுள்ளன.

அடிப்படையில் கவிதை என்பது சொல்லால், சொல்லைக் களையும் ஒரு வித்தை.

படைப்பாக்கச் சூழல் நம்பிக்கை தரத்தக்கதாக அதிகம் இல்லாத காலத்தில் சத்தியபாலன் அவர்களின் கவிதை நூலின் வருகை நம்பிக்கையும் - மகிழ்ச்சியும் தரத்தக்க ஒரு விடயமாகும். இன்னும் பல நூல்களை அவர் தரவேண்டும்.

**பாக்கியநாதன் அகிலன்**

குறிப்புகள்:



நடராஜா சத்தியபாலன் (17.04.1956) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியரான இவர் நீண்ட காலமாக கவிதை, சிறுகதை, பத்தி மற்றும் கட்டுரைகள் எழுதி வருகின்றார்.



41, இராஜவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.